## 'கலக' இலக்கியம்!


● ராஜ்கௌதமன்

சமீபத்தில் மறைந்த எழுத்தாளர் ராஜ்கௌதமன், தமிழின் முக்கியமான ஆய்வாளர். அம்பேத்கர், அயோத்திதாசர், பெரியார் ஆகியோரின் சிந்தனைகளை உள்வாங்கி இவர் எழுதிய 'தலித் பார்வையில் தமிழ்ப்பண்பாடு', 'அறம் அதிகாரம்', 'அயோத்திதாசர் ஆய்வுகள்', 'தலித்திய விமர்சனக் கட்டுரைகள்' போன்ற நூல்கள் ஆழமான கருத்துகளை முன்வைத்தவை.

'திராவிட இயக்க எழுத்துகள் இலக்கியமே இல்லை' என்ற கூக்குரல்கள் முன்வைக்கப்பட்டபோது, அதை மறுத்து, 'திராவிட இலக்கியம் எனும் கலக இலக்கியம்' எனும் கட்டுரை எழுதி எதிர்வினையாற்றியவர்.

ராஜ்கௌதமன் எழுதிய முக்கியமான கட்டுரை. அந்தக் கட்டுரையில் இருந்து சில வரிகள், "பார்ப்பனியத்தையும் வைதீக இந்து மதத்தையும் அதன் வருணாசிரமத்தையும் பகடி மூலம் தலைகீழாக்கிய பெரியாரின் சொல்லாடலில் தவிர்க்க முடியாதபடி, பெண்ணியத்துக்கும், தலித்தியத்துக்குமான கூறுகள் இடம்பெற்றுள்ளன.அண்ணாவின் 'வேலை போச்சு' என்ற சிறுகதையில் வைதீகம், புரோகிதம், சந்நியாசம் முதலான பவித்திரங்கள், ஒரு திருமண அழைப்பிதழில் கவனக்குறைவாக நேர்ந்துவிட்ட அச்சுப்பிழைகளின் மூலமாக நக்கல் செய்யப்படுகின்றன.

இவர்களின் படைப்புகள் தரமற்றவை, தகுதியற்றவை, வெறும் பிரச்சாரம் என்ற உன்னதக் கலை இலக்கியப் பீடத்தார்களால் தீர்ப்பிடப்பட்டன. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் குந்தகமாகிவிட்டன; இதனால், தரமான இலக்கியம் வளர முடியாமல் போய்விட்டது என்ற ஒப்பாரி எழுந்தது; இது இன்னமும் ஓய்ந்தபாடில்லை. கடவுள், அரசன், புரோகிதன், பதிவிரதை போன்ற உன்னதங்களின் வரிசையில் இலக்கியம் என்ற ஒன்றும் இடம்பிடித்துக்கொண்டது.

இது இன்னொரு விக்கிரகம்போல வழிபடப்படுகிறது. அங்கீகாரம் பெற்ற அதிகாரபூர்வப் பண்பாடு, எவற்றையெல்லாம் மரியாதைக் குறைவானவை, பாவமானவை, அருவருக்கத்தக்கவை என விலக்கி வைத்துள்ளதோ அவற்றையே, முன்வந்து ஏற்றுக் கலகப் பாங்கில் வாழ்வதன் மூலமாக, அதிகாரபூர்வப் பண்பாட்டை அதிரவைத்து, அதன் முகத்திரையைக் கிழிப்பது, கலக இலக்கியத்தின் மற்றொரு பரிமாணம். 'குமாஸ்தாவின் பெண்' என்கிற கதை மூலம் அண்ணா இதைச் சாதித்துள்ளார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்




பாப்பாக்குடி இரா.செல்வமணி

### மறக்க முடியாத நிகழ்வு!

2003-ஆம் ஆண்டு கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக இருந்த தற்போதைய கழகத் தலைவர் தளபதி அவர்கள், நெல்லை மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது, கலைஞரின் எழுத்துக்கள் மீது தீராத காதல்கொண்ட ஒரு கவிஞன் என்ற முறையில், சங்கர் நகர் விருந்தினர் மாளிகையில், நேரில் சந்தித்து மகிழ்ந்தபோது எடுத்த படம். மேனாள் சபாநாயகர் அய்யா ஆவுடையப்பன் அவர்களும் கழக நெசவாளர் அணியைச் சேர்ந்த 'முரசொலி' முருகன் அவர்களும் உடன் உள்ளனர். இப்போது கலைஞருக்காக நான் எழுதிய, **'மறைவேது உனக்கு மன்னவா?'** நூலினை வெளியிடக் காத்திருக்கிறேன்.

**– பாப்பாக்குடி இரா.செல்வமணி,**
**கவிஞர் தியாகராச நகர், திருநெல்வேலி-11.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இதழுக்காக நிலம் அடமானம்!

1942 -ஆம் ஆண்டு 'திராவிட நாடு' இதழைத் தொடங்கினார் பேரறிஞர் அண்ணா. இதழின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே, 'இயக்கத்தின் லட்சியம் புரிந்தாக வேண்டும்' என்பதை அறிந்திருந்த அண்ணா, தனது நண்பர்களின் கூட்டுமுயற்சியால் - உதவியால், 'திராவிட நாடு' இதழைத் தொடங்கினார். இதற்காக, அண்ணா, தனது சிற்றன்னையாருக்குச் சொந்தமாக இருந்த நிலத்தை வங்கியில் அடமானமாக வைத்தும், நிதி திரட்டி இருந்தார்.

## சீரணி ⟹ இளைஞர் அணி

36

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...

ஓவியம் : ரவி பேலட்




# புதியதோர் உலகு செய்த இளைஞர் அணி!

பேரறிஞர் அண்ணா தொடங்கிய சீரணி அமைப்பு, சீராகச் செயல்பட்டுக் கொண்டிருந்த அதே காலத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இன்னொரு புதிய திட்டத்தைச் செயல்படுத்தினார். அதுதான் **'இளைஞர் அணித் திட்டம்'**. ஆம்... இன்று **'இளைஞர் அணி'** என்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஓர் அணியாக இருக்கிறது. ஆனால், அன்று அது ஓர் அரசுத் திட்டமாகவே செயல்படுத்தப்பட்டது.

இந்த இளைஞர் அணி தொடர்பான அறிவிப்பை, 1971-72-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து பேசும்போது, கலைஞர் அவர்கள் வெளியிட்டார்கள். இதுகுறித்து, 1971 செப்டம்பர் 16-ஆம் தேதியிட்ட **'தமிழரசு'** இதழ் இவ்வாறு தெரிவிக்கிறது:

"அந்த இளைஞர் அணி செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளிலிருந்து தொடங்கப்படுகிறது. வேளாண்மை, கல்வி, மருத்துவவியல், பொறியியல், கால்நடையியல், உடற்பயிற்சிக் கல்வி, கலை, அறிவியல், வணிகவியல், பத்திரிகைத் தொழில், சமுதாயப் பணி, செவிலிப் பணி, நுண்கலை, மற்றுமுள்ள கலைக் கல்விப் படிப்புகள் ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்கள் அல்லது தகுதிச் சான்றிதழ் பெற்றவர்கள், தொழில்நுட்பக் கல்விக் கூடங்களில் படித்துத் தேறிய ஆண், பெண் இருபாலரும் இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்பொழுது இளைஞர் அணியில் இரண்டாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்களுக்கு, சத்திய விஜயநகரம் (வட ஆற்காடு மாவட்டம்), கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்), பவானி சாகர் (கோவை மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), தி.கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) முதலிய இடங்களில் நான்கு வாரம் பயிற்சி அளிக்கப்படும்.

**மக்கள் நல்வாழ்வு வசதிகளைப் பெருக்குவது, கிராமங்களில் நற்பணி மன்றங்களை அமைப்பது, கல்வியின்மையை ஒழிப்பது போன்ற செயல்களில் இளைஞர் அணியினர் ஈடுபடுத்தப்படுவார்கள்.**

பயிற்சியளிக்கப் பெற்றவர்கள், தமிழ்நாட்டிற்குள் எந்தக் கிராமத்தை அரசு குறிப்பிடுகின்றதோ, அந்தக் கிராமத்தில்தான் வசிக்க வேண்டும், பணியாற்ற வேண்டும். மக்கள் நல்வாழ்வு வசதிகளைப் பெருக்குவது, கிராமங்களில் நற்பணி மன்றங்களை அமைப்பது, கல்வியின்மையை ஒழிப்பது போன்ற செயல்களில் இளைஞர் அணியினர் ஈடுபடுத்தப்படுவார்கள். சமுதாயச் சீர்கேடுகளைப் போக்கி 'புதியதோர் உலகு' செய்ய இவர்கள் பாடுபட வேண்டும்.

இளைஞர் அணியில் தொண்டர்களாகப் பணியாற்றுவோர், பின்னர் அரசுப் பணியில் சேர சிறப்புச் சலுகை காட்டப்படும்".

இவ்வாறு, இளைஞர்களைச் சமுதாயப் பணிகளுக்குப் பயன்படுத்தியதோடு, சமுதாயச் சேவையில் ஈடுபடும் இளைஞர்களுக்கு அரசு வேலையில் முன்னுரிமையையும் கொடுத்து ஊக்குவித்தது, கலைஞர் அரசு!

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

36

**கோவி.லெனின்**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# சுயநலக்காரர்களின் வதந்திகள்!

***தமிழ்நாட்டின் திராவிடக் கட்சிகளின் ஆட்சியினால், குறிப்பாக, தி.மு.க. ஆட்சி செய்வதால் பிராமணர்களுக்கு வாழ்வாதாரம் இல்லை என்று, அவர்களது சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்களே?***

திராவிடம் என்பது NON-BRAHMIN சமூகங்களின் உரிமைகளுக்கான 'சமூக நீதி இயக்கம்' தானே தவிர, ANTI BRAHMIN இயக்கமல்ல. திராவிடத்தின் முதல் அரசியல் இயக்கமான 'நீதிக்கட்சி' ஆட்சியில் 1921-இல் பனகல் அரசரால் நிறைவேற்றப்பட்டு, 1928-இல் அமைச்சர் முத்தையாவால் நடைமுறைப்படுத்தப்பட்ட வகுப்புவாரி இடஒதுக்கீட்டில் பிராமணர் உள்ளிட்ட அனைத்து சமூகத்தினருக்கும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

சுதந்திர இந்தியாவில் அதனை எதிர்த்து, செண்பகம் துரைராஜ் என்ற பிராமணர் மூலம் வழக்கு தொடுத்து, இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் குழுவில் இருந்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யங்காரை வைத்தே வாதாடி, வகுப்புவாரி இடஒதுக்கீடு செல்லாதபடி, நீதிமன்றத்தின் தீர்ப்பு அமையக் காரணமானவர்கள் அவர்கள்தான். 1967-இல் அண்ணா தலைமையில் தி.மு.க. முதன்முதலாகப் பதவியேற்ற காலத்திலிருந்தே, தமிழ்நாட்டில் பிராமணர்கள் உரிமை பறிக்கப்படுவதாக அவர்களுக்கான ஊதுகுழல்கள் முழங்குவது வழக்கம். பிரபல நாடகாசிரியரும் திரைப்பட இயக்குநருமான விசு ஒரு படத்தில், "நான் 1967-க்குப் பிறகு பேண்ட் போடுறதையே விட்டுவிட்டேன்" என்று டயலாக் பேசியது உள்படப் பலவும், இத்தகைய ஒரு கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிதான். ஆனால், உண்மை அதுவல்ல என்பது பிராமணச் சமுதாயத்தில் உள்ளவர்களுக்கே தெரியும்.



கலைஞர் ஆட்சிக்காலத்தில் கிராமப்புற மாணவர்கள் கல்லூரியில் சேரும்போது வழங்கப்பட்ட வெயிட்டேஜ் மதிப்பெண், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணச் சலுகை உள்ளிட்ட அனைத்துமே பிராமணச் சமுதாயத்தினருக்கும் சேர்த்துத்தான் செயல்படுத்தப்பட்டன. அதுபோலவே அரசின் சமூக நலத் திட்டங்களும் அனைத்து சமுதாயத்தினரையும் உள்ளடக்கியதுதான். **'திராவிட மாடல்'** என்பது அனைவரையும் உள்ளடக்கியது என்பதையும், **'எல்லாருக்கும் எல்லாம்'** என்றும் திராவிட நாயகராம் நம் முதலமைச்சர் தொடர்ந்து வலியுறுத்தி, அதன்படியே செயல்பட்டு வருகிறார். கோயில் அர்ச்சகர்களின் ஊதிய உயர்வு தொடங்கி, பிராமணர் சமுதாயத்தினரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, நலன் காக்கப்பட்டு வருகின்றன. இதன் பலனை உணர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். தங்களுடன் மற்ற சமூகத்தினரும் சமமாக நடத்தப்படுவதா என்கிற வருணாசிரமப் பார்வை கொண்ட சுயநலக்காரர்கள் மட்டும்தான் வதந்திகளைப் பரப்புகிறார்கள்.

**தங்களுடன் மற்ற சமூகத்தினரும் சமமாக நடத்தப்படுவதா என்கிற வருணாசிரமப் பார்வை கொண்ட சுயநலக்காரர்கள் மட்டும்தான் வதந்திகளைப் பரப்புகிறார்கள்.**

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

660

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131